# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வாரி வருடம் புரட்டாசி மாதம் 14–ஆம் நாள் செப்டம்பர் மாதம் 30.09.2020ம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் ஆகஸ்ட்–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 57<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | அறந்தாங்கி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதியான SBM 2.0ன் 15 வது நிதிக்குழு நிதித் தொகை பெற்றிட குப்பையில்லா நகராட்சிக்கான மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 Star Rating) பெற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் மின்கல இயக்கு வாகனங்கள் (BOV) மற்றும் இலகு ரக வாகனங்கள் (LCV) மூலம் குப்பைகள் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு நுண் உரக்கூட மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அறிவியல் முறைப்படி குப்பைகள் கையாளப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.இதனை தொடர்ந்து குடிமக்கள் பிரதிநிதிகள், முன்னால் வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருமளவு குப்பைகள் உருவாக்குபவர்களிடம் சுய உறுதிமொழி சான்று பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனைக்கு அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு. | **தீர்மான எண்:–** 58<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 3**

இந்நகராட்சி கணினிப்பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கிட இந்நகர்மன்றத் தீர்மான எண். நாள்.28.03.2020ன் மூலம் ரூ.10.00லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு ஏற்கனவே இயங்கி வந்த நகல் பெருக்கி இயந்திரத்திற்கு தேவையான டோனர் வாங்கி வழங்கிட கணினி உதவி திட்ட அமைப்பாளர் கோரியுள்ளபடி கணினி உபரணங்கள் வாங்கிட 02.09.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ள விபரப்படி 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றன அவை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No. | Description of Item | Qty | Rate Quaoted by | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Marvel Computers & Electronics, 5/1, Balaji Nagar, 1st cross, Alagapuram, Salem | | Graphiitec Imaging Solutions, 28/1, Ramakrishnapuram, North, Karur. | | MM OFFICE AUTOMATION, 351, 1st Floor, CTO Colony, Alagapuram, Salem-4 | |
| | | | Rate/ Qty (Rs.) | Amount | Rate/ Qty (Rs.) | Amount | Rate/ Qty (Rs.) | Amount |

**தீர்மான எண்:–** 59

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Supply of Toner for RICOH M.P.3054 Copier Printer | 3 | 6,300 | 18,900 | 6,900 | 20,700 | 5,950 | 17,850 |
| 2 | GST 18 % | | | 3,402 | | 3,726 | | 3,213 |
| Total | | | | 22,302 | | 24,426 | | 21,063 |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எம்.எம். ஆபீஸ் ஆட்டோமேசன், சேலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்

**<u>பொருள் எண். 4</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் மேற்கூரை பழுதடைந்து ஆங்காங்கே உடைந்தும் எந்நேரமும் விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி மேற்கூரையை புதிதாக மாற்ற வேண்டியது அவசியமாகிறது. மேலும் பழுதடைந்துள்ள எல்.இ.டி. விளக்குகளை மாற்றவும் அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.40,000.00 க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்:–</u>** 60

**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 5</u>** | இந்நகராட்சி புதுக்கோட்டை சாலையில் கடந்த 40 ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளை உயிரி தொழிற்நுட்ப முறையில் (Bio Mining) தரம்பிரித்து நிலத்தினை மீட்கும் பணி ரூ.297.00 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணி மேற்கொள்ளும் பொழுது 40 எச்.பி. (28 கே.வி.ஏ.) மின் அழுத்தம் ஏற்கனவே பெறப்பட்ட மும்முனை இணைப்பு போதுமானதாக இருந்தது. எனவே இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. பணி மிகவும் சுணக்கமாகவும், போதிய முன்னேற்றம் இல்லாமல் இருந்து வந்தது. ஒப்பந்ததாரரை துரிதப்படுத்தி பணியினை மேற்கொண்டு முடித்து தர அறிவிப்பு மற்றும் நேரிலும் தொடர்பு கொண்டு அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பணியினை துரிதப்படுத்தி 31.05.2021க்குள் முடிக்கும் பொருட்டு ஒப்பந்ததாரிடம் கூடுதல் இயந்திரங்கள் பொருத்த அறிவுறுத்தப்பட்டதன் பேரில் புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. எனவே தற்பொழுது உள்ள மின் அழுத்தம் போதுமானதாக இல்லை எனவும் 80 எச்.பி. (60 கே.வி.ஏ.) அளவு மின் அழுத்தம் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதால், மின் வாரியத்திற்கு கோரிக்கை அனுப்பவும், புதிய பேனல் போர்டு, மின் ஒயர்கள் மற்றும் தேவையான மின் உபகரணங்கள் வாங்கிடவும் அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 (நான்கு லட்சம் மட்டும்)க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு.</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்தோ அல்லது மேற்படி திட்ட நிதியிலிருந்து பெறப்படும சேமிப்பு அல்லது வங்கி வட்டியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>3. மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டியதொகைக்காக ரூ.2.00 லட்சம், மின் உபகரணங்கள் மற்றும் பேனல் போர்டு வாங்கிட ரூ.2.00 லட்சத்திற்கு விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோரி பெறலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 61<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 6</u>** | இந்நகராட்சி பகுதியில் எதிர்வரும் பருவ மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளை எதிர் கொள்ளும் வகையில் மணல் மூட்டைகள், சவுக்கு கம்புகள் ஆகியவை தயார் நிலையில் வைக்கவும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை டீசல் என்ஜின் கொண்டு வெளியேற்றவும், ஜேசிபி, பொக்கலைன் எந்திரங்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தவும் | **<u>தீர்மான எண்:–</u>** 62<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 5.00 லட்சத்திற்க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 7</u>** | இந்நகராட்சி அண்ணா நகர் பகுதியில் மழையினால் சாலைகள் குண்டும் குழியுமாக தண்ணீர் தேங்கி பழுதடைந்துள்ளதனை சீரமைக்க பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, மேற்படி சாலையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.0.84 லட்சத்திற்க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 63<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 8</u>** | இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2020-2021 சாலைகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற மதிப்பீட்டு பிரேரனை கையேடு தயார் செய்த வகையிலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2017-2018 பணிகள் முடிவடைந்து பணி முடிவு அறிக்கை மற்றும் பயனீட்டு சான்று பெற புகைப்படம், புத்தக வடிவில் தயார் செய்த வகையிலும், நீர் நிலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுக்குளத்தினை புனரமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற மதிப்பீட்டு பிரேரனை கையேடு தயார் செய்து சமர்ப்பித்த வகையிலும், நகராட்சி அருகன் குளம் காந்தி பூஙகாவை புதுப்பிக்க பூஙகா அமைக்க பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு பிரேரனை கையேடு தயார் செய்த வகையிலும் ஆன செலவினம் ரூ.18,500.00 க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 64<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 9</u>** | அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் 02.09.2020-ந் தேதிய அரசாணை எண்,(D) 298ல் கொரோனா நோய் தொற்று (கோவிட்-19) தடுப்பு பணிகாரணமாக தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத ஒராண்டு குத்தகை இனங்கள் மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு (கடைகள் மற்றும் வரியில்லா | **<u>தீர்மான எண்:–</u>** 65<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr><td></td><td>இனங்கள்) வாடகை தொகை செலுத்துவதியிருந்து விலக்கு அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது,<br><br><u>அலுவலக குறிப்பு :-</u><br><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் (ந.க.எண்,3666/2020/அ1)</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 10</u></td><td>இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினஙகளுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>1</td><td>ராஜ் ப்ளக்ஸ் & ஸ்டிக்கர்ஸ், அறந்தாங்கி</td><td>சுதந்திர தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ப்ளக்ஸ் அச்சடித்து நிறுவிய வகையில்</td><td>ரூ.28350.00</td></tr>
<tr><td>2</td><td>ராஜ் ப்ளக்ஸ் & ஸ்டிக்கர்ஸ், அறந்தாங்கி</td><td>கொரோனா தடுப்பு நடவடிக்கையாக விழிப்புணர்வு ப்ளக்ஸ் மற்றும் ஸ்டிக்கர் அச்சடித்து நிறுவிய வகையில்</td><td>ரூ.20400.00</td></tr>
<tr><td>3</td><td>திரு.சி.சேகர், துப்புரவு ஆய்வாளர்</td><td>திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் கெரோனா தடுப்பு நடவடிக்கைக்காக வாகனம் பழுது நீக்கம் மற்றும் இதர செலவினம் மேற்கொண்ட வகையில்</td><td>ரூ.12075.00</td></tr>
<tr><td>4</td><td>அல் பிஸ்மி மல்டி ரிப்பேரிங் சென்டர், அறந்தாங்கி</td><td>கிருமி நாசினி தெளிக்கும் பவர் ஸ்பிரேயர் பழுது நீக்கம் செய்த வகையில்</td><td>ரூ.2200.00</td></tr>
</table></td><td><u>தீர்மான எண்:–</u> 66<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td>5.</td><td>ஓம் சக்தி டெக் சர்வீஸ், சென்னை</td><td>பொது சுகாதாரப்பிரிவு முதிர்வு கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிப்பு பிளாக் ஸ்டோன் ஃபாகிங் இயந்திரம் பழுது நீக்கம் செய்தது</td><td>ரூ.14350.00</td></tr></table><br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>பதிவு செய்யலாம். | |
| **<u>பொருள் எண். 11</u>** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயக்கப்பட்டு வரும் பேட்டரியில் இயங்கும் வாகனங்களுக்கு 2020–21ம் ஆண்டிற்கு உண்டான வருடந்திர வாகன பராமரிப்பு பணிகள் (Annual Maintanance) செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:02981/2019/எச்1) | **<u>தீர்மான எண்:–</u>** 67<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 12</u>** | இந்நகராட்சி 2020–2021ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள், எழுது பொருட்கள், கணினி உபகரணங்கள், காப்பியர் பேப்பர்கள், கணினி ரசீதுகள் அனைத்தும் அரசு சார்ந்த சார்பு நிறுவனங்கள் மற்றும் | **<u>தீர்மான எண்:–</u>** 68<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கூட்டுறவு அச்சகங்களில் வாங்குவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.5.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :–**<br><br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4185/பி2/2016) | |

**ஒம்/–த.பாஸ்கரன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**